அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 29/96

எனது இல. 1/543 ச/02டீ/13

அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்;
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1996.10.14 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

## சம்பள மீளமைப்பு - மொழிபெயர்ப்பாளர் சேவை

இணைந்த மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட வகுப்பினதும் 1ஆம் வகுப்பினதும் வேதனங்களை பின்வருமாறு மீளமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

| வகுப்பு | தற்போதைய சம்பள அளவுத் திட்டம் (வருடாந்தம்) | புதிய சம்பள அளவுத் திட்டம் (வருடாந்தம்) |
|---|---|---|
| விசேட வகுப்பு | ரூபா. 55440-11x1560-72600 | ரூபா. 61680-10x1560-77,280 |
| 1ஆம் வகுப்பு | ரூபா. 39000-2x780-12x1200-1x1560-56520 (ரூபா. 41760/-க்கு முன் வினைத்திறன் காண் தடை) | ரூபா. 47640-15x1560-71,040 (ரூபா. 52320/-க்கு முன் வினைத்திறன் காண் தடை.) |

02. புதிய சம்பளங்களுக்கு இப்போதுள்ள சம்பளங்களை மாற்றியமைத்தல் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்படி அமைதல் வேண்டும்.

03. இச் சம்பள மீளமைப்பு 1996.06.12 ஆந் திகதி தொடக்கம் செயற்படும்.

04. இந்தச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரட்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.